மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கேள்வியிலேயே பாலாறு என்றுதான் இருக்கிறது.

மதுரை மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம்

*305 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்ட கூட்டுறவு சப்ளை மார்க்கெட்டிங் சொசைட்டி லிமிடெட்டின் போர்டு டிஸ்மிஸ் செய்யப்பட்டு ஸ்பெஷல் அதிகாரி நியமிக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஸ்பெஷல் அதிகாரி நியமனத்திற்குப் பின் சொசைட்டியின் வியாபாரம் அபிவிருத்தி அடைந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) பொதுவாக வளர்ச்சி காணப்படுகிறது.

வட ஆற்காடு மத்திய கூட்டுறவு வங்கியின் குழு

*306 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய பேங்கு போர்டைக் கலைக்க நோட்டீஸ் எப்பொழுது எதற்காக கொடுக்கப்பட்டது ?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) விவர அறிக்கை* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையிலே 'மன நிறைவுதரும் வகையில் நடக்கவில்லை. கடன் தொகையை ஆராய்தல், அதற்கு ஒப்பளிப்பு வழங்கல், கடன் வழங்கல் ஆகியவை குறித்துக் கடுமையான முறைகேடுகள் நடந்ததாகத் தெரிய வந்துள்ளது' என்று இருப்பதுபோல் இது எல்லாம் கண்டுபிடித்ததற்குப் பிறகு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றாலும் நீதிமன்றத்திற்குப் போனதற்குப் பிறகு அது நேர் விரோதமான முறையிலே தவறு செய்யக்கூடியவர்களுக்குச் சாதகமான முறையிலே தீர்ப்பு அளிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே தீர்ப்பளிக்கப்பட்டதா, இங்கே தீர்ப்பளிக்கப்பட்டதா ?

---

* 102–103-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.